## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.443/2020 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 5 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. வாசிம்அக்ரம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of May 2026.

நான் ஏர்வாடியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். சாட்சி கணேசமூர்த்தி என்பவரை தெரியாது. எதிரி மணிகண்டன் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஆண்டு, தேதி, மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள் காவல்நிலையத்திற்கு சொந்தவேலை காரணமாக சென்றிருந்தேன். அப்போது போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வெள்ளை தாளில் கையெப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெப்பங்கள் என்னுடையது தான் அந்த கையெப்பங்கள் **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆகும். என் முன்பாக ஆஜர் எதிரிகளையோ, வழக்கின் மற்றொரு எதிரியான மணிகண்டனையோ கைது செய்யவில்லை. அவர்களை விசாரித்தபோது மணிகண்டன் என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை, அவரிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.05.20 17:42:54 +0530

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 16.08.2020 ஆம் தேதி நண்பகல் 12.30 மணியளவில் ஏர்வாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே நானும், சாட்சி கணேசமூர்த்தி என்பவரும் வந்தபோது பைக்கில் வந்த ஆஜர் எதிரிகள், மற்றொரு எதிரியான மணிகண்டன் என்பவர்களை எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது வழக்கின் முதலாம் எதிரி மணிகண்டன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் அன்றைய தினமே 15.10 மணிக்கு எதிரிகள் வந்த TN 75 V 6167 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தையும், TN 74 Q 5748 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் அப்பாச்சி இருசக்கர வாகனத்தையும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி எங்களை விசாரணை செய்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, எதிரிகளை காப்பாற்ற தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.05.20 17:42:58 +0530

.